# கொடுங்கலூர் பகவதி அம்மன் நம்பிக்கைகளும் உளவியலும்

**ர.ரெஜிதா**

**முனைவர் பட்ட ஆய்வாளர்,**

**பூ சா கோ கலை அறிவியல் கல்லூரி, கோவை.**

119

**ஆய்வுச்சுருக்கம்**

கேரளாவில் குருவாயூர் ,திருச்சூர்,எர்ணாகுளம்,வட்டப்பாறை, சந்திராபுரம்,பொதிகல் போன்ற பல்வேறு இடங்களில் கொடுங்கலூர் பகவதி அம்மன் கோவில் அமைந்துள்ளது. கேரளாவில் திருச்சூர் மாவட்டத்தில் கொடுங்கலூர் பகுதியில் அமைந்துள்ள பகவதி அம்மன் கொடுங்கலூர் அம்மை மற்றும் குறும்பா பகவதி எனவும் அழைக்கப்படுகின்றாள் . தமிழ்நாட்டில் கண்ணகியாகவும் ,கேரளத்தில் பகவதியாகவும் திகழ்கிறார் . பல்வேறு நம்பிக்கைகளும் பல்வேறு இடங்களில் இருந்தும் மக்கள் இக்கோயிலுக்கு வருகின்றனர் . இதில் திருச்சூரில் உள்ள பகவதி அம்மன் கோயிலில் காணப்படும் மக்களின் உளவியலை இவ்வாய்வு பதிவு செய்யப்படுகிறது.

**திறவுச்சொற்கள்**

கொடுங்கலூர் பகவதி -வழிபாடு- நம்பிக்கைகள்

**முன்னுரை**

தமிழ் இலக்கியத்தில் நாட்டுப்புறவியல் என்பது மிகவும் முக்கியமான இடத்தை பிடித்துள்ளது . நாட்டுப்புறவியல் பாடல்கள் , கதைகள்,தெய்வங்கள்,மருத்துவர்கள் என பல வகையான பிரிவுகள் உள்ளன.இவை அனைத்தும் மக்களின் உளவியல் சார்ந்தே அமைகிறது .ஒவ்வொரு பிரிவிலும் பல்வேறு வகையான ஆராய்ச்சி கூறுகள் உள்ளன .மக்களிடம் நேரடியாக அவர்கள் மனநிலைக்கு ஏற்றவாறு பேசி அதனை ஆராய்ந்து வெளிப்படுத்துவதே நாட்டுப்புறவியலின்முக்கியநேக்கமாக உள்ளது . நாட்டுப்புறவியலும் உளவியலும் ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது . கொடுங்கல்லூர்பகவதி அம்மன் கோவிலில் நம்பிக்கைகளும் அதனுள் இருக்கும் மக்களின் மனநிலையையுமே இக்கட்டுரையின் நோக்கமாகும் .

**கொடுங்கலூர் பகவதி தல வரலாறு**

கொடுங்கலூர் பகவதியைஅவ்வூர் மக்களும் கோயில் நம்பூதிரிகளும் இரு வேறு கதைகளை கூறுகின்றனர் . அதில் ஒன்று தாரகன் என்னும் அசுரன் பரசுராமன் எனும்அரசரையும் அங்குள்ள மக்களையும் வெகுநாட்களாக துன்பப் படுத்திக் கொண்டிருந்தான் .அந்த துன்பத்தை தாங்க முடியாமல் அரசனும் மக்களும் சேர்ந்து சிவபெருமான் கோவிலுக்கு சென்றனர் . சிவபெருமானிடம் தங்களைக் காத்தருளும்படி வேண்டினார்கள்.உடனே சிவபெருமான் எழுந்தருளி சக்தி தேவியை சிவபெருமான் நெற்றிக்கண்ணிலிருந்து பத்ரகாளியாக தோன்றச் செய்தார் .அவ்வாறு தோன்றிய பத்ரகாளியம்மன தாரகனை அழித்தாள் .அவ்வாறு செய்தால் பரசுராமன் சக்தி தேவிக்கு ஒரு கோவிலை கட்டி பகவதி அம்மனாக வழிபட ஆரம்ப காலத்தில் சிவன் கோயிலாக இருந்து காலப்போக்கில் அம்மன் கோயிலாக மாற்றம் அடைந்தது என தல புராணம் கூறுகிறது.

இவை மட்டுமல்லாமல் பாண்டிய மன்னரின் தவறான தீர்ப்பு காரணமாக மதுரையை எறித்துவிட்டு அங்கிருந்த சேர நாட்டிற்கு வந்தடைந்ததாகவும் இதனை அறிந்த சேரமன்னர் கண்ணகியின் கற்பு திறனை அறிந்து வழிபட நினைத்து கோயில் ஒன்றைக் கட்டி பிற்காலத்தில் அவை பகவதி கோயிலாக மாற்றம் அடைந்தது எனவும் சிலர் கூறுகின்றனர்.

**"கேரளத்திற்கு மிகுந்த கோபத்துடன் வந்து இங்கே இருந்த அம்மனை வழிபட்டு முக்தி அடைந்ததால் கண்ணகியை பகவதி என்று கூறுகின்றனர். "(தி ஹிந்து தமிழ், 2017)**

**கோவில் அமைப்பு**

கேரளாவில் வடக்கு நோக்கி காணப்படும் ஒரு சில கோயில்களில் கொடுங்கலூர் பகவதி அம்மன் கோவிலும் ஒன்று . இந்த கோயிலில் கிழக்கு நோக்கிய நிலையில் ஒரு புறம் சிவனும் , மற்றொரு புறம் விநாயகர் சிலையும் உள்ளது . சன்னதியில் ஏழு கன்னிமார்களின் சிலையும் வைக்கப்பட்டுள்ளது . இதன் நடுவில் பகவதி அம்மன் சிலை உள்ளது . பகவதியின் சிலை 7 அடி உயரத்தில் , இரு கைகளும், பெரிய கண் மற்றும் வலது காலை மடக்கி இடது காலை தொங்கவிட்டு வண்ணம் அமைந்திருக்கும் . பகவதியின் சிலை முழுக்க முழுக்க பலா மரத்தினால் செய்யப்பட்டு இருக்கும் . பகவதிக்கு சாந்தாட்டம் எனும் சிறப்பு அபிஷேகம் மட்டுமே நடைபெறுகின்றது . சன்னதியில் நின்று பகவதி தரிசித்து விட்டு அங்கேயே சிவனை தரிசனம் செய்யும் படி அமைந்துள்ளது . கோயிலின் நுழைவுப்பகுதியில் ஷேத்திர பாலரின் சில உள்ளது.ஷேத்ர பலருக்கு சர்க்கரை சாதத்தில் தயிர் சேர்த்து நெய்வேத்தியம் செய்யப்படுகின்றது . இக்கோயிலில் கோவலன் ஷேத்ர பாலகர் எனவும் ,கண்ணகியை வைசூரி மாலை எனவும் அழைக்கின்றனர் .

**நம்பிக்கையும் உளவியலும்**

நாட்டுப்புறவியலில் நம்பிக்கை என்பது மனிதனின் மனதையும் எண்ணங்களையும் பொருத்து மாறுபாடு அடையும். ஒரு நாடு கிராம மக்களின் நாகரிகம் , பண்பாடு, பழக்க வழக்கங்கள் , வரலாறு, தெய்வ நம்பிக்கைகள் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு நாட்டுப்புறவியல் நம்பிக்கை அமையும் .

**'பாரம்பரியமாக நாட்டுப்புறவியல் ஆய்வுகள் அறிவியலின் பல்வேறு துறைகளில் பயிற்சி இல்லாதவர்கள் மனநிலைகளை கற்பதில் கவனம் செலுத்துகிறது இவைகளின் அடிப்படையில் விவரிக்கப்பட்டுள்ளன. "( அரிகோ ஆடம், 2010)**

இவ்வாறாக கொடுங்கலூர் பகவதி அம்மன் கோவிலில் சில நம்பிக்கைகள் இன்றளவும் மக்களால் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன.

1 துலாபார வழிபாடு

2 குருதி பூஜை

3 பூக்கட்டுதல், படையலிடுதல்

இவ்வாறாக சில நம்பிக்கைகள் இன்றளவும் கொடுங்கலூர் மக்களால் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன

**துலாபார வழிபாடு**

துலாபாரம் என்பது ஒரு மிகப்பெரிய தராசில் ஒரு புறம் பக்தரும் , மறுபுறம் வேண்டிய ஏதாவது ஒரு பொருளும் எடைக்கு எடை வைப்பதாகும் . மஞ்சள் ,தங்கம், வெள்ளி, நாணயங்கள்,அரிசி, பழங்கள், நெய்,மிளகு, ஜீரகம், முதலியவற்றை கடவுளுக்கு அளிப்பதாக வேண்டுவர் .

**குழந்தை பாக்கியத்திற்காக துலாபாரம் செலுத்துவதாக வேண்டிக் கொள்ளும் பக்தர்கள் குழந்தை பிறந்தும் காணிக்கையாக துலாபாரம் செலுத்துகிறார்கள். "**

(தினகரன், **2015)**

கொடுங்கலூரில் உள்ள மக்கள் குழந்தை வரம் வேண்டி கொடுங்கலூர் பகுதியை காண வருவார்கள் . கண்ணீர் மல்க வேண்டி பகவதி முன் மண்டியிட்டு குழந்தை வரம் கேட்ட உடனேயே அதற்கு ஈடாக துலாபாரம் கொடுப்பதாக வேண்டி விட்டு செல்வது வழக்கமாகிவிட்டது . பிறகு அவர்களுக்கு குழந்தை பேறு கிட்டியவுடன் கொடுங்கலூர் அம்மைக்கு நன்றி சொல்லி அவர்கள் வேண்டிய பொருள் தங்கம்,வெள்ளி,மஞ்சள்..., இதில் ஏதேனும் ஒன்றை துலாபாரமாக அந்த கோயிலுக்கு கொடுக்கிறார்கள் . அப்போது அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள் . அவர்கள் உணர்ச்சி வேகத்தில் பகுதியை பாராட்டுகின்றனர். அங்கு வரும் ஒவ்வொரு மக்களும் இங்கு வந்துவேண்டிய பிறகு தான் குழந்தை பேறு கிடைத்ததாக கூறுகின்றனர். அவ்வாறு கூறுகையில் முகத்தில் மகிழ்ச்சி தொங்குகிறது .

**குருதி பூஜை**

ஆரம்ப காலம் முதல் குருதி பூஜை இக்கோயிலில் பிரசித்தமாக நடைபெறுகிறது . பகவதிக்கு ஆடு ,கோழி போன்றவை பழியாக கொடுக்க மாட்டார்கள் . அதற்கு மாறாக தண்ணீரில் சுண்ணாம்பு மஞ்சள் கலந்து பூஜை நடத்துவர். இக்கோயிலில் பூஜை செய்யும் நம்பூதிரிகள் எட்டு வகையான பாத்திரத்தில் சுண்ணாம்பு மஞ்சள் அல்லது குங்குமம் கலந்து அதனைக் குருதியாக பாவித்து பூஜை செய்து கொண்டிருக்கிறார் .

**"உடல்நலக்குறைவு பில்லி சூனியம் முதலியன நீங்க குருதி பூஜை செய்து அந்த தீர்த்தத்தை தெரிவித்தால் துர்தேவதைகள் விலகிவிடும் என்பது ஐ**இயலின்முக்கியநோக்கமாகஉள்ளன"

http://blog.omnamasivaya.co.in

இக்கோயிலில் வரும் பக்தர்கள் குருதி பூஜை செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளார் . அதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்கு தெரிந்தவர்களுக்கும் குருதி பூஜையை பற்றி விளக்குகிறார்கள் .பில்லி சூனியம் இன்றளவும் உள்ளது என நம்புகிறார்கள் . அவர்களுக்கோ வீட்டில் உள்ளவர்களுக்கோ உடல்நிலை சரியில்லாமல் போனாலோ அல்லது சரியாக சாப்பிடாமல் வாந்தி மயக்கம் வயிறு வலி முதலியன ஏற்பட்டால் கோயிலுக்கு வந்து பகவதி அம்மனை பூஜை செய்கின்றனர் . பூஜை செய்த உடன் அனைத்தும் சரியாகி விட்டது என நம்பி விடுகின்றனர் . இந்த குருதி பூஜை செவ்வாய் வெள்ளி கிழமைகளில் நடைபெறுகிறது . இங்குள்ள மக்கள் அதிகமாக வந்து கலந்து கொள்வார்கள் என்று அக்கோயிலின் நம்பூதிரிகள் கூறுகின்றனர்.

**பூக்கட்டி பார்த்து படையில் இடுதல்**

பூக்கட்டி பார்த்தல் என்பது பல்வேறு விதமான கோயில்களில் பின்பற்றப் பட்டு இருந்தாலும் திருச்சூரில் உள்ள மக்கள் அனைவரும் இக்கோயிலில் பூக்கட்டி பார்ப்பதையே விரும்புகின்றனர் . இது பிரசித்தமாக காணப்படுகின்றது கொடுங்கலூர் மக்கள் அனைவரும் இக்கோயிலில் வந்து பூக்கட்டி பார்த்து திருமணம் நடக்க இருத்தல் மாப்பிள்ளை பார்க்கச் செய்தல் முதலியன சுபகாரியங்களுக்கு பூக்கட்டி பார்ப்பது வழக்கமாக கொண்டு இருந்துள்ளனர் அவ்வாறு பூக்கட்டி பார்த்த காரியம் இனிதே நடந்து பிறகு கோயிலுக்கு வந்து பாடிய விடுதலை வழக்கமாக கொண்டிருந்தனர் சிலர் கடவுளுக்கு பொங்கலோ பொங்கல் படையல் ஆகவும் சில சில சாதத்தைப் அடையாளமாகவும் விடுவர் மற்றும் ஒரு சிலர் சாமிக்கு

படையல் இட்டு பூஜை முடிந்த பின் அங்கு வரும் பக்தர்களுக்கு அன்னதானம் ஆக அழைப்பர் மற்றும் ஒரு சிலர் அங்கு வாழும் பெரியவர்கள் ஆசிரியையும் வாங்கி வாழ்வு சிறப்புற வேண்டும் என்று எண்ணி வயதானவர்களும் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டிருக்கின்றனர்

**சாமியாடுதலும் உளவியலும்**

சாமியாடுதல் என்பது திருவிழாவின் போதும் பூஜைகள் செய்யும் போதும் ஒரு தனிப்பட்ட நபருக்கு வருவது . இவர் தன்னிலை மறந்து ஆடுவதும் , குறி சொல்லுவதுமே சாமியாடுதல் .கோயில்கள் மட்டுமல்லாமல் பிற இடங்களிலும் சாமியாடுவர்கள் . கொடுங்கலூர் பகவதி கோயிலிலும் சாமியாடுதல் என்பது நடைபெறுகிறது. சாமியாடுபவர்களுக்கு பல காரணங்களால் சாமி வருகின்றன . உடுக்கை, மேளம் போன்ற இசைக்கருவிகள் வாசிக்கும் பொழுது தன்னிலை மறந்து ஆடுவார்கள் . பிறகு அதனைத் தொடர்ந்து குறி கூறுவார்கள். சாமியாடும் போது அவர்களின் மனதில் தங்களை முற்றிலும் கடவுளாகவே நினைத்துக் கொள்கிறார்கள்.

கோயிலில் இருக்கும் வாசனை , கடவுள் உருவம் , கோயிலில் இசைக்கப்படும் இசை , ஆகியவற்றின் காரணமாகவும் தன்னிலை மறந்து ஆடுவார்கள் . இதனையும் சாமியாடுதல் என்றே கூறுகின்றனர் . இவை சிறுவயதில் கேட்ட கதைகள் , பார்த்த சம்பவங்கள் மூலம் நிகழ்பவையாகும் . இவர்கள் குறி கூறுவதும் இதன் அடிப்படையிலே ஆகும்.

**"ஆன்மீக பயிற்சிகள் மூலம் சரியான வளர்ச்சியும் அறிவும்**

**பெற்றவர்களும் அருள்வாக்கு சொல்வதுண்டு. "**

**https://ta.quora.com**

சாமியாடுதல் முடிந்தவுடன் அவர்களின் மனது லேசாக இருப்பதாக கூறுகின்றனர் . ஆனாலும் அவர்களின் உடலில் ஏற்பட்டுள்ள காயங்கள் சரியாக சில நாட்கள் ஆகும் . இவர்கள் அதனை பொருட்படுத்தாமல் இருகின்றார்கள். சாமியாடிகளுக்கு இரத்த காயங்களும் ஏற்படுவதுண்டு . இவ்வாறு சாமியாடுதல் மனிதர்கள் மனநிலையை பொறுத்து மாறுபட்டது .

**முடிவுரை**

கொடுங்கலூர் பகவதி கோயிலில் நம்பிக்கை , வழிபாடு, சடங்கு முதலியவற்றை அங்குள்ள மக்கள் வேண்டி விரும்பி ஏற்றுக் கொள்கின்றனர் . வேண்டுதல் நிறைவேறிய பிறகு அவர்கள் செய்யும் வழிபாடுகள் பிரசித்திப் பெற்றவையாக உள்ளன . அந்த மக்களின் மனதில் எந்த ஒரு காரியமும் பகவதியை கண்டால் சரியாகும் என்ற எண்ணம் உள்ளன . இவர்கள் மனதளவில் பகவதியை மட்டுமே வழிபடுகின்றனர் . ஒவ்வொரு இன மக்களுக்குள்ளும் வழிபாடுகள் வேறுபட்டு காணப்படுகிறது . இதனை ஆராய்ந்து பார்த்து கூறுவதே நாட்டுப்புற உளவியல். இவை அன்றாட மக்களின் வாழ்வியலோடு தொடர்புடையது .

**மேற்கோள்கள்**

அம்மாகண்ணகிபகவதிதிஹிந்துதமிழ்பதிப்பு (26 /10 /2017)

அரிகோ ஆடம் 2010 நாட்டுப்புற உளவியல் உணர்வு மற்றும் சூழல் விளைவுகள் pg :317

கொடுங்கலூர் பகவதி அம்மன் ( 23 /1/ 2015) அன்று தினகரனில் பார்க்கப்பட்டது

http://blog.omnamasivaya.co.in

https://ta.quora.com